Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 02, 2023

செவ்வாய்க்கிழமை மே 02, 2023 | ஒளி: 08 கதிர்: 261 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மண்சரிவு அபாயம்




பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

முழுச் செய்தி P12




## த.ம.வி.பு கட்சி

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் மட்டக்களப்பு கஞதாவளை பொது மைதானத்தில் நடாத்தப்பட்ட சர்வதேச தொழிலாளர் தின நிகழ்வுகள். அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுறை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றன. (வ.சக்தி)




## ஜே.வி.பி

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) மேதினக் கூட்டம் கொழும்பு விஹாரமகா தேவி பூங்காவில் நடைபெற்றது.



## ஊர்வலத்தில் காமன் கூத்து

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் சுப்பையா சதாசிவம் தலைமையில், நுவரெலியாவில் நடைபெற்ற மேதின பேரணியில் காமக்கூத்து ஆடப்பட்டது. (எஸ். கே. குமார், ஆர். ரமேஸ்)



## த.தே.ம.மு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி சிவன் கோவிலடிக்கு முன்பாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் மே தின கூட்டம் நடைபெற்றது. அதில், இந்த கூட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராச கஜேந்திரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (செ.கீதாஞ்சன், சண்முகன் தவசீலன்)



## ஐ.ம.ச

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மேதின பேரணியும் கூட்டமும் கொழும்பில் நடைபெற்றது.




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம், கொழும்பு–14 சுதந்திர சதுக்க உள்ளக அரங்கில் நடைபெற்றது. அதில், சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக ஜனாதிபதி வாழ்த்துரை வழங்கினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கு

# இறுதிக்குள் இணக்கப்பாடு

**2048 இல் அபிவிருத்தி ஆண்டாக மாற்ற கைகோர்ப்போம்**

**புதிதாக சிந்தித்து புதிய பாதையில் செல்லும் கட்சியாக மாற்றுவோம்**

**டி.எஸ். சேனநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்தன ஆகியோரின் கொள்கைகளை பின்பற்றுவேன்**

**மக்கள் சபை வரைவு பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும்.**

இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இருப்பதாகவும் நாட்டின் நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் உடன்பாடு எட்ட எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P12







## 30 ஆவது நினைவு தினம்

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 30 ஆவது நினைவு தினம் தொழிலாளர் தினமான நேற்று (01) அனுஷ்டிக்கப்பட்டது.

முழுச் செய்தி P12



## கியூபாவில் மேதினம் இரத்து

கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கியூபாவின் கம்யூனிஸ்ட் அரசாங்கம் பாரம்பரிய மே தின அணிவகுப்பை ரத்து செய்திருந்தது.

முழுச் செய்தி P12




கொழும்பில் நேற்று (01) நடைபெற்ற மேதின பேரணியில் பங்கேற்பதற்காக கொடியுடன் சிறுவன் ஒருவன் வந்திருந்தான் (இணையம்)



## புர்கா அணிந்து வந்த திருடன் பெண்ணிடம் சிக்கினார்

புர்கா அணிந்துகொண்டு வந்த திருடன், கோழிகளை திருட முயன்றபோது அம்முயற்சி கைகூடவில்லை. அத்துடன், திருடன் கொண்டுவந்த கத்திகள் இரண்டையும் அப்பெண் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவம், பொகவந்தலாவை ஆரியபுரவில் ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ள நாய் அதிகாலை 1.30 மணியளவில் கடுமையாக குரைத்துள்ளது. அதனையடுத்து வீட்டினுள் இருந்த பெண் வெளியே வந்து பார்த்துள்ளார்.

முழுச் செய்தி P12



## மனைவிக்கு ஊசி போட்ட வைத்தியர் கைது

இளம் மனைவிக்கு இன்சுலின் ஊசியை பலவந்தமாக செலுத்தி கொலை செய்ய முயன்றார் என்றக் குற்றச்சாட்டின் அவரது கணவரான வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரையே பம்பலப்பிட்டி பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

முழுச் செய்தி P12

## இந்திய விசா குறித்து அறிவுறுத்தல்

சில போலி/மோசடி இணைய URLகள் மூலமாக இந்திய இ-விசாவை வழங்குவது கவனிக்கப்பட்டுள்ளது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

எனவே, விண்ணப்பதாரர்கள் இந்திய இ-விசாவைப் பெறுவதற்கு இந்தப் போலி URLகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளது.

உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடக அறிக்கையில் 125 போலி URLகளின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.




## “எரிவாயுவின் விலை குறையும்”



எரிவாயுவின் விலை இன்னும் சில தினங்களில் குறையும் என ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முழுச் செய்தி P12



## ‘தோட்ட காட்டான்’ ‘வத்து தெமழு’ என்று அழைக்காதே

**செ.தி.பெருமாள்**

டிக்கோயா, வனராஜா தோட்டத்தில் வசிக்கும் அன்புராஜ் என்ற தொழிலாளி தொழிலாளர் தினமான நேற்று (01) காலை 8 மணி முதல் 12 மணி வரை தனி மனித போராட்டத்தை நோர்வூட் எரிபொருள் நிரப்பும் நிலையம் முன்பாக உள்ள சந்தியில் பாலத்தின் மீதேறி நடத்தினார்.

அவர் ஏந்தியிருந்த பதாகையில்,

பெருந்தோட்ட தொழிலாளர்களை, ‘தோட்ட காட்டான்’ ‘வத்து தெமழு’ என்று கூறுவதை உடன் நிறுத்த வேண்டும்.

முழுச் செய்தி P12



## விலை குறைப்பு போதாது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

எரிபொருட்களின் விலைகள், ஏப்ரல்(30) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன எனினும், அந்த விலை குறைப்பு போதாது என ஹட்டன் வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருட்களின் விலைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஐ.ஓ.சி நிறுவனம் ஆகிய இரண்டும் குறைத்துள்ளன.

முழுச் செய்தி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

## 30 ஆவது நினைவு தினம்

கொழும்பு, புதுக்கடையில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு அருகில் நினைவு தின நிகழ்வொன்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள்சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாச உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள்,முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்னாரின் அபிமானிகள் என பலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

## புர்கா அணிந்து வந்த திருடன் பெண்ணிடம் சிக்கினார்

அங்கு புர்கா அணிந்து வந்த நபரொருவர் பதுங்கியுள்ளார். இதனை கண்ட அந்தப் பெண் அவருடன் மல்லுக்கட்டிய போது புர்கா கீழே விழுந்துள்ளது.

வந்தவர் ஆண் என கண்டதன் பின்னர், அவருடன் அப்பெண் மல்லுக்கட்டியுள்ளார். அத்துடன், 2 கத்திகளை பறித்துச் சென்றுள்ளார்.

இந்நிலையில், தனது மனைவியுடன் மல்லுக்கட்டியவர் திருடன் என்றும், தனது வீட்டில் வளர்க்கும் கோழிகளை திருடவே அத்திருடன் வந்துள்ளார் என்றும். திருடனைப் பிடிக்குமாறு பொகவந்தலாவை பொலிஸில் நிலையத்தில் அப்பெண்ணின் கணவன் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் திருடன் ஓடுவதும், பெண் திருடனுடன் மல்லுக்கட்டுவதும் பதிவாகியுள்ளது.

## மனைவிக்கு ஊசி போட்ட வைத்தியர் கைது



அதிகப்படியான இன்சுலின் ஏற்றப்பட்டதால் மயக்கமடைந்த பெண் ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

திருமணமாகி குழந்தை இல்லாத காரணத்தால் மனைவி மருத்துவரிடம் அடிக்கடி தகராறு செய்து வந்ததாகவும் இதனால், மனைவியை கொலைச் செய்யும் நோக்கி வைத்தியர் இந்த இன்சுலின் ஊசியை ஏற்றியிருக்கலாம் என்றும் அறியமுடிகின்றது.

## “எரிவாயுவின் விலை குறையும்”



அந்த வகையில் எமக்கு சாதகமான நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

"பணவீக்கம் 70% இல் இருந்து 35% ஆக குறைந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அதை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர முயற்சிக்கிறோம் என்றார்..

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று (01) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

‘எண்ணெய் விலை குறைந்துள்ளதால், அடுத்த சில நாட்களில் எரிவாயுவின் விலையும் குறையும் என நம்புகிறோம்’ என்றார்.

# இறுதிக்குள் இணக்கப்பாடு



தனது முயற்சி அரசியலன்றி நாட்டின் பொருளாதாரத்தை சரியாக நிர்வகித்து மக்கள் மீதான சுமையை குறைப்பதே என்றும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பலம் தனக்கு இருப்பதாகவும் அதற்காக ஒத்துழைக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட முடியும் என்ற நம்பிக்கையினால் தான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம், கொழும்பு, சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றது. அதற்கு சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக வாழ்த்துரைத்த போதே இவ்வாறு தெரிவித்தார். “2048 வெல்வோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மேதிக் கொண்டாட்டத்தில் 68 பல்வேறு தொழில்சார் சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய அரசியலில் இருந்து விடுபட்டு நாட்டை பற்றி புதிதாக சிந்தித்து புதிய பாதையில் பயணிக்கும் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றுவோம் என்றார்.

2048 இலங்கையின் அபிவிருத்திக்கான ஆண்டாகும் என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, அந்தப் பயணத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் மக்களும் கைகோர்ப்பார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஆசியாவின் இரண்டாவது வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை கட்டியெழுப்பிய டீ.எஸ். சேனாநாயக்கவினதும் திறந்த பொருளாதாரத்தில் நாட்டை முன்னோக்கி கொண்டு சென்ற ஜே.ஆர். ஜயவர்தனவினதும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் இலங்கை மீளக் கட்டியெழுப்பப்படும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் நாட்டைப் பற்றி சிந்திக்கும் அதேவேளை கொள்கை அரசியலிலும் ஈடுபடும் கட்சி என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, ஒருபோதும் அந்தக் கொள்கையில் இருந்து விலகவில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் அரசியல் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற இளைஞர்களின் கோரிக்கையை சற்றும் மறந்துவிடவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்களுக்கு தலா ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்கும் பணி இம்மாதம் நிறைவடையவுள்ளது. கரு ஜயசூரியவின் பிரேரணையின் பிரகாரம் மக்கள் சபை தொடர்பான வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைகளுக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்புடன், நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உடன்பாட்டு இந்த ஆண்டு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இது மிகவும் முக்கியமானது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அக்கட்சியை ஆதரிக்கும் உங்கள் அனைவருக்கும் உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கடந்த 03 தசாப்தங்களாக நாடு கடுமையான பொருளாதார வீழ்ச்சியில் இருந்த நேரத்தில் நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றேன். நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததோடு, மக்கள் வீதிகளுக்கு இறங்கியிருந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டின் ஜனநாயக கட்டமைப்பையும், பாராளுமன்றத்தையும் சிதைக்க சிலர் முயன்றனர்.

இன்று நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது. உணவுத் தட்டுப்பாடு இல்லை. மேலும் நாட்டில் ஜனநாயக கட்டமைப்பு செயல்படுகிறது. அச்சுறுத்தல்கள் இன்றி பாராளுமன்றம் செயல்படுகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய பணியை தடையின்றி மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார்.

நான் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்க முன்னர், ஒரு விடயத்தைப் பற்றி சிந்தித்தேன். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பற்றி சிந்திக்கும் கட்சி. ஐக்கிய தேசியக் கட்சி ஒரு கொள்கை அரசியலில் இருக்கும் கட்சி. நாங்கள் அதனை விட்டுவிலகவில்லை. சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வது அவசியம், உலக வங்கியின் உதவி தேவை. நாம் 07 பில்லியன் டொலர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் 2020 தேர்தல் விஞ்ஞாபனத்தில், அன்று நாம் குறிப்பிட்டிருந்தோம். கட்சி என்ற வகையில் நாங்கள்தான் அந்த உண்மைகளை குறிப்பிட்டோம். மற்ற அனைவரும், பொருளாதார பிரச்சினை இருப்பதை அறிந்து, நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர்.

அதன் விளைவு என்ன, உண்மையைக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சி இறுதியாக தேசியப்பட்டியலில் வீழ்ந்தது. கசப்பானாலும் உண்மையை மக்களுக்குச் சொல்வதே எங்களின் கொள்கையாகும். அதனால் நாங்கள் அதிலிருந்து பின்வாங்கவில்லை. 2020 மற்றும் 2021 இலும் எங்களின் இலக்கு அறிவிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு, இந்தப் பிரச்சினை தீவிரமடைந்தபோது, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்து, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுமாறு அவருக்கு ஆலோசனை வழங்கினேன். இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்த போது எதிர்க்கட்சியின் ஏனைய குழுக்கள் கலந்துரையாடலை புறக்கணித்த போதும் நானும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் எதிர்க்கட்சியில் இருந்து கலந்து கொண்டோம்.

எனது முயற்சி அரசியல் அல்ல, நாட்டின் பொருளாதாரத்தை முறையாகக் கையாள்வதும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதும் ஆகும். எனவே நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பலம் என்னிடம் இருப்பதாகவும், எனக்கு ஆதரவளிக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயற்பட்டு அந்த பெறுபேறுகளை அடைய முடியும் என்ற நம்பிக்கையினால் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

அந்த நம்பிக்கை எனக்கு இருந்ததற்கு முக்கிய காரணம், 2001 இல் அரசாங்கம் கவிழ்ந்தபோது, பொருளாதாரத்தை மீட்டெடுத்தது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்த முடிந்ததுதான். 2015 இல், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், முதன்மை வரவு செலவுத்திட்ட மேலதிகத்தைப் பெறவும் ஒரு வாய்ப்பு கிடைத்தது என்றார்.

## ‘தோட்ட காட்டான்’ ‘வத்து தெமழு’ என்று அழைக்காதே



பொருட்கள் விலை உயர்ந்த நிலையில் உள்ளது அதனைக் குறைக்க ஆட்சியாளர்கள் முன் வரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களை இனி வரும் காலங்களில் பண்ணையாளர்கள் எனவும், பெருந்தோட்ட பண்ணையாளர்களை இனி வரும் காலங்களில் தமிழர்கள் எனவும், அழைக்கப்பட வேண்டும் என்றார்.

## மண்சரிவு அபாயம்

அதனடிப்படையில், மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பல்லேகம மற்றும் பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல, கேகாலை மாவட்டத்தின் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






## கியூபாவில் மேதினம் இரத்து

ஒவ்வொரு ஆண்டும் நூறாயிரக்கணக்கான மக்கள் சர்வதேச தொழிலாளர் தினத்தன்று ஹவானாவின் புரட்சி சதுக்கத்தை நிரப்புவதற்காக தீவு முழுவதிலும் இருந்து பஸ்ஸில் வருவார்கள்.

ஆனால், 1959 புரட்சிக்குப் பிறகு பொருளாதார காரணங்களுக்காக கொண்டாட்டங்கள் ரத்து செய்யப்படுவது இதுவே முதல் முறை.

கியூபாவில் சமீப வாரங்களாக பெட்ரோல் நிலையங்களில் நீண்ட வரிசைகள் உருவாகி, பல நாட்களாக வாகன ஓட்டிகள் காத்திருக்கின்றனர்.



## விலை குறைப்பு போதாது

இதன்படி, ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெட்ரோல் 7 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலையாக 333 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது..

மேலும், ஒக்டேன் 95 ரக ஒரு லீற்றர் பெட்ரோல் 10 ரூபாவினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலையாக 365 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலையை 15 ரூபாவினால் குறைத்துள்ளதுடன், அதன் புதிய விலையாக 310 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது..

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 135 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 330 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் மண்ணெண்ணெய் விலையில் மாற்றமில்லை என்பது குறிப்பிடத்தக்கது

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞன் கைது

வவுனியாவில் 6 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தாய் வெளிநாட்டில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து வருகின்றார். தந்தை இல்லை. வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டில் மாதாந்த கொடுப்பனவின் அடிப்படையில் குறித்த சிறுமி தங்கி இருந்துள்ளார்.

சிறுமிக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் பூவரசன்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சிறுமியின் அந்தரங்க உறுப்பில் இருந்து அசாதாரண

**“ சிறுமியின் வீட்டில் தங்கியிருந்த இளைஞரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இளைஞரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்**

இரத்தப்போக்கை அவதானித்த வைத்தியர்கள் பூவரசன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனை அடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டில் தங்கியிருந்த இளைஞரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இளைஞரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெள்ளத்தால் விவசாய நிலங்கள் கடுமையாக பாதிப்பு

**செ.தீவாகரன், ஆர்.ரமேஷ்**

மலையகத்தில் பிற்பகல் வேளையில் இடைவிடாது பெய்து வரும் அடை மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு பல இடங்களில் வீதி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா கந்தப்பளை பிரதேசத்தில் பல இடங்களில் வெள்ள அனர்த்த நிலை உருவாகியுள்ளதுடன் கோர்ட்லோட்ஜ் சந்தி மற்றும் புதிய வீதி தொகுதியில் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் சில குடியிருப்புக்களிலும் வெள்ளம் புகுந்தமை குறிப்பிடத்தக்கது . நுவரெலியா - ராகலை பிரதான வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுடிருந்தது.

சில பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதனால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது . கந்தபளை பிரதேசத்தில் அதிகமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாகக் பிற்பகல் நேரங்களில் வாகனச் சாரதிகள் பனி மூட்டம் மற்றும் மழையுடனான காலநிலை நிலவும் போது தமது வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு பயன்படுத்துவதன் மூலம் விபத்துகளை தவிர்த்துக் கொள்ளலாம் என நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக இப்பகுதியில் மழைக்காலங்களில் ஆற்றுநீர் பெருக்கெடுப்பதால் பல இடர்களைச் சந்தித்து வருவதாகவும் , தனது தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் அனைத்தும் வெள்ளத்தினால் அடித்து செல்லப்பட்டதால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை அடைகின்றனர்.



# பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும்

**நிதர்ஷன் விநோத்**



உலக தொழிலாளர் தினத்திலாவது வடக்கு கடற் தொழிலாளர்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

வடக்கு கடலில் நீண்ட காலமாக சட்ட விரோதமான கடற்றொழில் முறைகள் மற்றும் கடல் அட்டை பண்ணை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு உலக தொழிலாளர்கள் தினத்திலாவது தீர்வு கிடைக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கடல் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதியுடன் கருத்துரையாடி அவர்களை பிரச்சனைக்கு தீர்வினை பெற்றுக் கொள்வது தொடர்பாக கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.



# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

**நூருல் ஹுதா உமர்**

மட்டக்களப்பு மாவட்ட மூவின பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை மற்றும் குடைகள் என்பன பாடசாலையின் அதிபர்கள்கள் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன. பாடசாலைகளில் அதி கஷ்ட, தொழில் வாய்ப்பற்ற வாழும் மட்/மம/ ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயத்தை சேர்ந்த மாணவர்களுக்கும், கடுவத்மடு தர்மபால யூனியர் பாடசாலையை சேர்ந்த மாணவர்களுக்கும், மட்/கது/ புணானை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள், மற்றும் குடைகளும் இணைந்த கரங்கள் அமைப்பினால் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் இன் நிகழ்வுகளில் பாடசாலையின் அதிபர்களான எஸ்.விக்ரமன், எம்.எஸ்.எம். ரிஸ்மின், ஐ.பி.எஸ். என். குணசேகர மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் எல். கஜரூபன் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# குர்ஆன் வழங்கி வைப்பு




**நூருல் ஹுதா உமர்**

சாய்ந்தமருது தக்வா ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்று வரும் மழ்ஹருல் உலமுத்தீனியா மத்ரஸாவில் மார்க்க கல்வியை பயிலும் மாணவ, மாணவிகளுக்கான குர்ஆன், மற்றும் சீருடைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு பிறீடம் விளையாட்டு கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கழகத்தின் முக்கிய நிர்வாக உறுப்பினர்கள், தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், மதரஸா நிர்வாக சபை உறுப்பினர்கள், மற்றும் மாணவ, மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டார்கள்.

இக்குர்ஆன் மத்ரஸாவில் மார்க்க கல்வியை கற்கும் வறுமையான குடும்பங்களை சேர்ந்த 82 மாணவ, மாணவிகளுக்கான குர்ஆன்களும், மாணவர்களுக்கான சீருடைகளும் இந்நிகழ்வில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

# 3 நாட்களுக்கு மூடப்படும்

வெசாக் வாரத்தை முன்னிட்டு நாடு முழுவதும் இறைச்சி மற்றும் மீன் கடைகளை மே 5, 6 மற்றும் 7 ஆம் திகதி மூன்று நாட்களும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மதுபானசாலைகளும் 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் மூடப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

# மனைவியை தீமூட்டி கொன்ற கணவன் கைது

மனைவி மீது பெட்ரோல் ஊற்றி தீவைத்து கொன்ற கணவனை கைது செய்துள்ளதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய, சேதவத்தை. பீ.ஜே. பெரேரா மாவத்தையில் வசித்து வந்த 44 வயதான பெண்ணே இவ்வாறு தீ வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது சந்தேக நபரான கணவனுக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன.

பகுதி நேர வகுப்புக்கு சென்ற மகளை அழைத்து வருவதற்காக வீட்டில் இருந்து கடந்த 24 ஆம் திகதி இரவு 7 மணியளவில் புறப்பட்ட அப்பெண் வெல்லம்பிட்டிய கறுப்பு காலத்தை தாண்டி ஹல்முல்ல நோக்கி சென்றுக்கொண்டிருந்தார்.

# சகோதர மொழிப் பயிற்சி

**அ . அச்சுதன்**

திருகோணமலை எழுத்தாணி கலைப் பேரவையினால் நடாத்தப்படும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறை ஆர்வலர்களுக்காக இடம் பெறும் சகோதர மொழி கற்கை நெறி, ஏப்ரல் 29,30ம் திகதிகளில் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஊடகத்துறை சார்ந்த 25 பேருக்கும் சிங்கள ஊடகவியலாளர்கள் ஊடகத்துறை ஆர்வலர்கள் 25 பேருக்குமான கற்கை நெறி இடம் பெற்றது. வெவ்வேறு இடங்களில் இடம்பெறுகின்ற இக் கற்கைநெறி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன த்தால் கற்பிக்கப்படுகின்றது. எதிர்வரும் 06 மாதங்கள் 150 மணித்தியாலங்கள் நடைபெறும் இக்கற்கை நெறி வார இறுதி நாட்களில் இடம்பெறுகின்றது.





# நிதி கையளிப்பு...

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு மக்கள் நலன்சார் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இளம் முஸ்லிம் பெண்கள் (YWMA) பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை கிறீன்பீல்ட் பள்ளிவாசலின் மீள்கட்டுமான பணிகளுக்காக ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பினால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த நிதிகளுக்கு அமைவாக சில கட்டுமானப் பணிகள் நிறைவுற்றிருந்தன.

இதனைத் தொடர்ந்து கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் அவர்கள்

> **“ ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பினால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த நிதிகளுக்கு அமைவாக சில கட்டுமானப் பணிகள் நிறைவுற்றிருந்தன.**

இதற்கான ஐந்தாம் கட்ட நிதி உதவியாக மேலும் ஐந்து இலட்சம் ரூபாய் அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து பள்ளிவாசல் நிருவாகிகள், மஹல்லாவாசிகள் மற்றும் பலர் முன்னிலையில் வைத்து வழங்கி வைத்தார்.

இப்பள்ளிவாசலின் மீள்கட்டமைப்பிற்காக இதுவரை 6 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யு எஸ் எயிட் (USAID) நிறுவனத்தின் நிதி உதவியுடன் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்பாடு (SCORE) திட்டத்தின் கீழ் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் உளநலம் மற்றும் உளசமூகம் சார் சேவைகள் எனும் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களை சேர்ந்த ஆசிரியர்கள் 45 பேருக்கு 12 நாள் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது

பாடசாலை மட்டங்களில் காணப்படும் பிரச்சனைகளை இனங்கண்டு அதனை முறையாக தீர்ப்பதற்காக வழிகாட்டலும் ஆலோசனையும் எனும் குறித்த செயலமர்வு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் என நியமனம் பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் 45 பேருக்கே முன்னெடுக்கப்பட்டுள்ளது

இவர்களுக்கான12 நாள் செயலமர்வின் இறுதி நாள் செயலமர்வு ஏப்ரல் (29) வட்டக்கச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் ஒழுங்கமைப்பில் மாகாண கல்வி அமைச்சின் நெறிப்படுதலில் இந்த செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது



# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதான வீதியில் இயங்கி வரும் வாகன திருத்தும் நிலையமொன்றில் வாகனத்தில் மின் பாய்ச்சி ஒட்டும் போது மின்சாரம் பாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா சுஜிதரன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மறுசீரமைப்பின் போது பாதிப்புகள் இல்லாது பார்த்துக் கொள்ளவும்

நாட்டின் மொத்தக் கடன் தொகையில் 50 சதவீதம் உள்நாட்டுக் கடனான காணப்படுகின்றது. அதாவது அரசாங்கத்தினால் உள்நாட்டில் கொள்வனவு செய்த கொண்ட கடன் பத்திரங்கள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்கள் போன்றன இதில் அடங்குகின்றன.

இவற்றை மறுசீரமைப்பு செய்கையில், மீளச் செலுத்தும் காலத்தை தாழ்த்துதல், செலுத்த வேண்டிய தொகையை குறைத்தல் போன்ற தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ளும். இதனால், பாதிக்கப்படுவது அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்த உள்நாட்டு வங்கிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றில் பங்களிப்பு வழங்கியுள்ள நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினர் போன்றோருக்கு தாக்கம் ஏற்படும்.

அரசாங்கத்தினால் குறிப்பாக, ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்ரமசிங்க இது தொடர்பில் கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுகையில், உள்நாட்டு வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டிருந்தார். இதனை சில தினங்களுக்கு முன்னர் நிதி இராஜாங்க அமைச்சரும் உறுதி செய்திருந்தார்.

அவர்கள் குறிப்பிடுவதைப் போன்று இந்த கடன் மறுசீரமைப்பு இடம்பெறுமாயின், மீளச் செலுத்தும் காலம் தாழ்த்தப்படுவது, அல்லது நிலுவையிலுள்ள, குறுங்கால அடிப்படையில் எதிர்வரும் காலப்பகுதியில் மீளச் செலுத்தப்பட வேண்டியுள்ள தொகைகளை, நீண்ட கால அடிப்படையில் தாமதித்து செலுத்துவதற்கு உடன்படுவர். இதன் போது உயர்ந்த வட்டி வீதம் செலுத்த நேரிடும். இந்தத் தொகையையும் பொது மக்களிடமிருந்தே பல்வேறு வரி விதிப்பனவுகள் மூலமாக அறவிடும்.

பாதிப்பில்லை என எவ்வாறு தெரிவித்தாலும், குறுகிய காலப்பகுதியில் அவ்வாறான தாக்கங்களை மக்கள் உணர முடியாத போதிலும், மறைமுகமாக வரி அதிகரிப்புகளினூடாக அந்தத் தாக்கம் மக்களுக்கு உணரப்படும். அத்துடன், எதிர்கால சந்ததியினரின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஒழுங்கான தீர்மானமின்மை காரணமாக ஏற்கனவே எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இந்த அரசாங்கம், தூர நோக்க அடிப்படையில் சிந்தித்து இந்த மறுசீரமைப்பு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது முக்கியமானதாகும். இந்த ஆண்டின் இறுதியில் அல்லது எதிர்வரும் ஆண்டின் முற்பகுதியில் முக்கிய தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில், தமது பிரபல்யத்தன்மையை பேணுவதற்காக காலம் தாழ்த்துவது போன்ற தீர்மானங்களை முறையாக திட்டமிடாது, தற்போதுள்ள பிரச்சனையை காலம் கடத்தும் வகையில் மேற்கொள்ளாமல், சமநிலைப்படுத்தி தீர்மானமெடுப்பது உகந்தது.

எப்படியும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பினால் ஏதேனும் வகையில் மக்களுக்கு பாதிப்பு தோன்றுவதை மறுத்துவிட முடியாது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# தேர்தலும் 'வாதங்களும்'

மொஹமட் பாதுஷா

இலங்கை போன்ற நாடுகளில் முன்வைக்கப்படும் இன, மத பயங்கர வாதங்களுக்கும் அரசியலுக்கும் நெருங்கிய ஒரு தொடர்பிருக்கின்றது. இங்கே அரசியல் எனும் போது உள்நாட்டு அரசியலுக்கு மட்டுமன்றி வெளிநாட்டு அரசியல் நகர்வுகளுக்கும் தொடர்பிருக்கின்றது என்பது நாம் அறியாததல்ல.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இனம் சார்ந்த அரசியல் இலங்கையில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக இருந்து வந்திருக்கின்றது என்பதை வரலாற்றை ஆழமாக நோக்குகின்ற யாரும் அறிந்து கொள்வது அவ்வளவு கடினமன்று.

இதே வகிபாகத்தையே மதவாதமும், பெருந்தேசிய வாதமும், பயங்கரவாதமும் தீவிரவாத போக்குகளும் வகித்து வந்திருக்கின்றன. ஆனால் இதிலுள்ள ஆச்சரியம் என்னவென்றால் இன்று வரையும் அரசியல்வாதிகள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு இவை பெரும்பாலும் வெற்றியையே பெற்றுக் கொடுத்திருக்கின்றன என்பதுதான்.

இலங்கையில் இனப் பிரச்சினையை எப்போதோ தீர்த்து வைத்திருக்கலாம். அதைச் செய்வதற்கு பெருந்தேசிய சக்திகள் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுதக் குழுக்களும் இது விடயத்தில் பல தருணங்களில் தவறிழைத்தன என்றுதான் கூற வேண்டியுள்ளது.

அதுபோலவே, சிங்கள, இந்து, இஸ்லாமிய மத தீவிர செயற்பாட்டாளர்களும் தாம் சார்ந்த வாதங்களை முன்வைத்ததன் ஊடாக இலங்கையில் முரண்பாடுகளுக்கு தூபமிட்டு வந்திருக்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த வாதங்கள் எல்லாம் அரசியல் தரப்பினருக்கு நன்மை தராது என்றிருந்தால் என்றோ இந்த வாதங்கள் எல்லாம் ஒரு பிசாசைப் போல பிடிக்கப்பட்டு குடுவைக்குள் அடைக்கப்பட்டிருக்கும்.

ஆக, ஒரு 'பிச்சைக்காரனின் புண்ணைப்போல' இலங்கையில் ஏதாவது ஒரு குழப்பம் இருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு அரசியல் தரப்பினர், இனவாத, மதவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு இன்று வரை இருந்து வருகின்றது. இந்தப் புண்ணில் 'அழற்சியை' ஏற்படுத்தும் வேலையை அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளும் செய்து கொண்டிருக்கின்றன எனலாம்.

யுத்தத்தை சந்தைப்படுத்தியே கிட்டத்தட்ட இலங்கையில் கிட்டத்தட்ட 40 வருட அரசியல் வெற்றிகள் சாத்தியமாக்கப்பட்டுள்ளன. சிங்கள அரசியல்வாதிகள் மட்டுமன்றி ஒரு வகையில் பார்த்தால், தமிழ் அரசியல்வாதிகளும் இதனை ஒரு கருவியாக பயன்படுத்தியிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய, பணம் வழங்கிய கதைகள் கூட உள்ளன.

2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு யுத்த வெற்றிதான் சந்தைப்படுத்தல் சரக்காக இருந்தது. ஆனால் 5 வருடங்களுக்குப் பிறகு அதனை வெற்றிகரமாக சந்தைப்படுத்த முடியாத ஒரு கட்டம் வந்ததை நாம் அறிவோம்.

அந்த தருணத்தில் மதவாதமும் இனவாதமும் திட்டமிட்டு கையிலெடுக்கப்பட்டு சின்ன சின்ன அரசியல் நகர்வுகளில் வெற்றியை அவர்கள் அடைந்து கொண்டனர். குறிப்பாக இனவாதத்தால் ஒரு கோட்டையை ராஜபக்ஷக்கள் கட்டியிருந்தனர் எனச் சொல்லலாம்.

அப்போதுதான் இனவாதத்துக்கு எதிரான நல்லிணக்க சித்தார்ந்தம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நிலைமாறுகால நீதி என்பவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு களத்திற்கு வந்த மைத்திரி, ரணில் கூட்டணியில் நல்லாட்சி மலர்ந்தது.

அதன்பிறகு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவி இருக்கவில்லை. அல்லது இருந்த கருவிகளும் மந்திரங்களும் வேலை செய்ய இயலாத ஒரு கட்டம் வந்தது எனலாம். அந்த வேளையிலேயே 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்றது.

தாக்குதலுக்குப் பிறகு சடசடவென எல்லாம் சொல்லி வைத்தாற்போல் நிகழ்ந்ததை நாம் இன்னும் மறந்து விடவில்லை. தொப்பி போட்டு தாடிவைத்த ஒரு கூட்டம் இந்த பயங்கரவாத செயற்பாட்டை மேற்கொண்டிருந்தாலும் இதனை ஆட்டுவித்தோரின் நிகழ்ச்சி நிரல் அரசியல் நோக்கை கொண்டதாக இருந்தது என்று நாம் அன்று அனுமானித்த விடயம் இப்போது பகிரங்கமாகவே பேசப்படுகின்றது. இவற்றைக் கோர்த்துப் பார்க்கின்ற போது இனவாதம் கைகூடாத தருணத்தில் இன்னுமொரு வாதம் கையிலெடுக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் கருத வேண்டியுள்ளது,

2022 இல் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் பெருமளவானோரின் சமூக உணர்வு இருந்தது. அரச எதிர்ப்பு மனநிலையும், சமூக விடுதலை உணர்வும் இருந்தது. ஆனால் எங்கோ ஒரு மூலையில் அதற்குள் அரசியல், வெளிநாட்டு நலன்களும் செல்வாக்குச் செலுத்தியது. புதிய ஜனாதிபதி பதவியேற்பின் பின்னால் ஒரு தொலைக்காட்சியை அணைத்து விடுவது போல காட்சிகள் 'ஒப்' செய்யப்பட்டதில் இருந்து இதனை உணர முடிந்தது.

இப்போது உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நாட்டில் எந்த அபிவிருத்தியைச் செய்வதற்கும் தேர்தல் நடத்துவதற்கும் நிதியில்லை. அதற்கான சாதக நிலையும் இல்லை என்ற நியாயங்கள் கூறப்படுகின்றன. ஆனால் மத்திய வங்கியின் கஜானாவிலும் கடலில் மூழ்கிய கப்பலிலும் ஊழல் செய்வதற்கு இன்னும் பணமிருக்கின்றது என்பதே முரண்நகையாக உள்ளது.

இங்கு இன்னுமொரு விடயம் கவனிப்பிற்குரியது.

அதாவது நாட்டில் அபிவிருத்தியை கட்டியெழுப்புதவற்கும் பொருளாதார, சமூக கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்ற அழைப்பை அரச தலைவர் பலமுறை விடுத்துவிட்டார்.

தமிழ் தரப்பிற்கு அரசியல் தீர்வையோ அதுபோன்ற ஒரு பொதியையோ வழங்குவதில் பல தடங்கல்கள், திட்டமிட்ட சூட்சும முட்டுக்கட்டைகள் காணப்பட்டாலும் தமிழ் தேசியத்தை மிகக் கவனமாகக் கையாள ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். மறுபுறத்தில் கிள்ளுக்கீரையாக முஸ்லிம் அரசியல் இருக்கின்றது.

இவ்வாறு எல்லோருக்கும் அழைப்பு விடுத்துக் கொண்டு வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் இன ஆதிக்க செயற்பாடுகள்தான், சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அக்குரணையில் பயங்கரவாதத் தாக்குதல் இ;டம்பெறவுள்ளதாக வெளியான கதைகளும் இந்த சந்தேகத்தை வலுப்படுத்தாமல் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் நிலங்கள் பல்வேறு தோரணைகளில் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அரசியல்வாதிகள், அரச இயந்திரத்தின் துணைகொண்டு சில குழுக்கள் அல்லது அதிகாரிகள் இதனைச் செய்கின்றார்கள். அத்துடன் மிக உன்னத வழிகாட்டியான புத்த பெருமானின் சிலையை பயன்படுத்தி சில நகர்வுகள் செய்யப்படுவது இன்னும் கவலைக்குரியதாகும்.

நாடு இப்போது இருக்கின்ற நிலையில் இதுபோன்ற நகர்வுகளுக்காக நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க வேண்டிய தேவையில்லை. அத்துடன் இது நல்லிணக்கத்தை குலைக்கும் என்பதால் நாட்டை ஒன்றிணைந்து எல்லோருமாக முன்னேற்றுவதற்கான முயற்சிகளுக்கு பெரும் தடைக்கல்லாகவும் அமையும்.

இதுவெல்லாம் ஆட்சியாளர்களுக்கு தெரியாததல்ல. அதனையும் மீறி இனவாத செயற்பாடுகளும் ஏனைய வாதங்கள் குறித்த அச்சமூட்டல்களும் மேற்கொள்ளப்படுகின்றது என்றால், எங்கோ அது உதைக்கின்றது.

அதாவது இதுவெல்லாம் அரசாங்கத்திற்கு குறிப்பாக ஜனாதிபதிக்கு நல்ல பெயரை ஏற்படுத்தக் கூடியவை அல்ல. அப்படியிருந்தும் இது முன்னெடுக்கப்படுகின்றது என்றால், ஒன்று இது பிரதான ஆட்சியாளரை சூட்சுமமாக குழிவெட்டி வீழ்த்தும் சதித்திட்ட செயற்பாடாகவும் அதன் ஊடாக எதிர்தரப்பு கட்சிகளில் ஒன்று அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான நகர்வாகவும் இருக்க வேண்டும். அல்லது, அடுத்த தேர்தலுக்கு அரசாங்கமே ஒரு 'வாதத்தை' கூர்தீட்டுவதாக இருக்க வேண்டும்.

நாட்டில் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறாது என்றும் நேரடியாக அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அகலக்கால் பாய்ச்சல் மேற்கொள்ளலாம் என்றும் ஊகங்கள் அரசியல் அரங்கில் பரவலாக முன்வைக்கப்படுவதை காண முடிகின்றது. ஒருவேளை அது உண்மையாக இருக்குமென்றால், அடுத்த தேர்தலை முன்னிறுத்தி அரச ஆதரவு தரப்போ அல்லது மொட்டு அணியோ ஏதோ ஒரு வாதத்தை பயன்படுத்த முனைவதாகவே கருத வேண்டியுள்ளது.

எப்படியிருப்பினும், இது இன்று கட்டுக்கடங்காத அடக்குமுறையாக மாறி வருகின்றது. அரசாங்கம் இரட்டை முகத்தை காட்டி வருவதாகவே பல சந்தர்ப்பங்களில் தோன்றுகின்றது. 'இப்படியே போனால், இன்னுமொரு மோதல் நிலை உருவாகலாம்' என சுமந்திரன் எம்.பி. கூறுமளவுக்கு நிலைமைகள் சென்றிருக்கி;ன்றன என்பது சர்வ சாதாரணமான விடயமல்ல.

எனவே, அரசாங்கமும் அரச இயந்திரத்தில் உள்ள அதிகாரிகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். கடந்த காலத்தில் இனவாதம், பயங்கரவாதம், மதவாதத்திற்கு முட்டுக் கொடுக்கின்ற செயற்பாடுகளை மேற்கொண்டு, அதனூடாக 'தின்பாருக்கு தேனெடுத்துக் கொடுத்து' நாட்டில் இன்னுமொரு பின்னடைவுக்கு வித்திடக் கூடாது.



## வாழ்வியல் தரிசனம்

தனிமையும் இனியது; மக்களுடன் இணைவதும் இனிமையானது. இயற்றையுடன் ஒன்றித்தால் எல்லாமே இனிமையானது. பிரச்சினைகள் வரும்போது, தன்னைத்தான் ஆராயத் தனிமையின் உதவி பெரியது. எனினும் சிலரிடம் பிரச்சினைக்கு ஆலோசனை கேட்டால், அதுவே பிரமாண்டான துயரையும் தருவதாகி விடலாம். கேட்பவர்களிடம் தகைமை அறிந்து கேட்க வேண்டும்.

மனிதனின் குழப்ப நிலையை இயற்கைவளம் குறைத்து விடுகின்றது. உங்களுக்குப் பிடித்த இடங்களுக்குப் போகலாம். கடற்கரை, பரந்தவெளி, பூஞ்சோலை, சுற்றுலாப் பயணம் எனப் பலவழிகளில் பிடித்ததைக் கண்டுகொள்வது நல்லது.

நெஞ்சத்தில் ஏதாவது சஞ்சம் ஏற்பட்டால், கோவில்களுக்கு மக்கள் செல்வதுண்டு. இன்னும் சிலர் தங்களுக்குப் பிடித்தமான பாடல்களைக் கேட்பார்கள். இசைக் கருவிகளைப் பயின்றால், உஸ்ணமான மனது குளிர்ந்துவிடும். பொழுது போவதே தெரியாது.

தேவையின்றி தனித்து இருப்பதும் வெறுமை உணர்வை ஏற்படுத்தலாம். நல்ல நட்புகளைத் தேடுங்கள். உலகப் பெருவெளயில், நாங்கள் மட்டும் பிரச்சினைகளுடன் வாழவில்லை. எல்லா விடயங்களிலும் திருப்பம் உண்டு. கவலை ஏன்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தங்கூசி வலைகளால் அபாயம்

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடியில் தங்கூசி வலைகளை பயன்படுத்தி வருவதால், நீர்வாழ் உயிரினங்கள் அழியும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வவுனிக்குளத்தின் கீழ் 120க்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் கூடுதலான மீனவர்கள், தங்குசி வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடியை மேற்கொண்டு வருவதனால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது குறித்த குளத்தில் மீன்படி நடவடிக்கைகளுக்காகத் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்துவதன் காரணமாக, பல்வேறு வகையான நீர்வாழ் உயிரினங்களும் அழிவடைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

–யது பாஸ்கரன்












மே தினத்தன்று கொழும்பில் நேற்று (01) இடம்பெற்ற மேதின ஊர்வலங்களில் பங்கேற்றிருந்த சிலர்...



## வவுனியாவில்

புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் பிரதான மேதினக்கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில் இடம்பெற்றது. க. அகரன்



# த.தே.ம.மு....





தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் தமிழ் தேசிய தொழிலாளர் தினம் மல்லாவியில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி நகரின் அனிஞ்சியன்குளம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான மேதின ஊர்தி பவனி மல்லாவி நகரின் ஊடாக மல்லாவி சிவன் ஆலய வளாகத்தை அடைந்து அங்கு மேதின கூட்டம் இடம்பெற்றுவருகிறது (சண்முகன் தவசீலன்)




இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கம் தமது மேதினத்தை ஹட்டனில் நடத்தியது (மலையக நிருபர்கள்)






## யாழ்.நகரில்

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தில் வாகன ஊர்வலமொன்று யாழ் நகரில் நடைபெற்றது.




இராகலை நகரில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி அதன் மேதின நிகழ்வை கட்சியின் முன்னாள் பிராந்திய செயலாளர் சிவ. இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. (ஆ.ரமேஷ்)





## இ.தொ.ஐ.மு

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தலைமையில் நுவரெலியா மாநகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
மே தின ஊர்வலம் நுவரெலியா பிரதான தபாலகத்திற்கு அருகில் ஆரம்பித்து நுவரெலியா பொது நூலக கேட்பொர் கூடத்தை சென்றடைந்தது . ( எஸ். கே. குமார், ஆர். ரமேஸ்)





## பதுளையில்

இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் மேதின பேரணி பதுளை நகரில் அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. ( எம். செல்வராஜ்)





## இ.தொ.கா

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தோட்டங்களில் மே.தின பூஜை வழிபாடுகளை மேற்கொண்டிருந்தது. (மலையக நிருபர்கள்






இன்று 138வது மே தினமாகும். உலக தொழிலாளர் தினமான இன்று (01) மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றது.
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரிஎம்விபி) கட்சி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் மேதின பேரணி இராஜாங்க அமைச்சரும் கட்சியின் தலைவருமான சிவனேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு நகரிலிருந்து களுதாவளை நோக்கிச்சென்றது. ரீ.எல்.ஜவ்பர்கான்




பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம் இன்று (01) தனது 59 ஆவது ஆண்டில் காலடி வைத்தது. அதனையொட்டி ஹட்டன் சிவசுப்பிரமணிய ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. ( எஸ் கணேசன்)






உலக தொழிலாளர் தினமான மே முதலாம் திகதியான இன்று திங்கட்கிழமை காத்தான்குடியில் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. எம் எஸ் எம் நூர்தீன்

பெங்களூர்

# பிரதமர் மோடி மீது கைபேசி வீச்சு

கர்நாடக மாநிலம் மைசூருவில் ஜம்பு சவாரி ஊர்வல பாதையில் திறந்த வாகனத்தில் பிரதமர் மோடி நேற்று முன் தினம் ஊர்வலமாக சென்று தேர்தல் பிரசாரம் செய்தார்.

ஊர்வலத்தின்போது பொதுமக்களும், பா.ஜனதா தொண்டர்களும் மோடியின் வாகனத்தின் மீது பூக்களை தூவினர். மோடியின் வாகனம் சிக்ககடியாலா பகுதியில் சென்றபோது அவரது வாகனத்தின் இடது பக்கத்தில் இருந்து ஒருவர் திடீரென கைப்பேசியை வீசினார்.

அந்த கைப்பேசியை மோடியின் வாகனத்தின் மீது விழுந்தது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இருப்பினும் மோடியின் ஊர்வலம் முழுமையாக நடந்தது. மோடி வாகனத்தின் மீது வீசிய நபரை பொலிஸார் வலைவீசி



தேடிவருகிறார்கள்.

இந்த நிலையில், பிரதமர் மோடி வாகனத்தின் மீது கைப்பேசி வீச்சு பற்றி புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. வீசப்பட்ட கைப்பேசி பா.ஜ.க தொண்டருடையது எனவும், பிரதமரை பார்த்த மகிழ்ச்சியில் பூக்களை தூவி, கைகளை வேகமாக அசைத்தபோது கைப்பேசி தவறுதலாக வீசப்பட்டதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பேசியை கைப்பற்றி உளவுத்துறை மற்றும் காவல்துறையினர் தீவிர விசாராணை நடத்தி வருகின்றனர்.

# ஐ.பி.எல்: ராஜஸ்தானை வென்ற மும்பை

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ராஜஸ்தான்

ராஜஸ்தான்: 212/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வல் 124 (62) ஓட்டங்கள். பந்துவீச்சு: பியூஷ் சாவ்லா 2/34 [4], ஜொஃப்ரா ஆர்ச்சர் 1/35 [4], குமார் கார்த்திகேயா 0/14 [2])

மும்பை: 214/4 (19.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 55 (29), டிம் டேவிட் ஆ.இ 45 (14), கமரொன் கிறீன் 44 (26), திலக் வர்மா ஆ.இ 29 (21), இஷன் கிஷன் 28 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 2/27 [4], சந்தீப் ஷர்மா 1/35 [4])

போட்டியின் நாயகன்: யஷஸ்வி ஜைஸ்வல்

இந்நிலையில், சென்னையில் முன்னதாக நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் வென்றது.

இதேவேளை, அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்கிறது.



சீனா

## “ திருமணமாகாது குழந்தை பெறலாம்”

சீனாவில் திருமணம் ஆகாத பெண்களும் இனி குழந்தைகள் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்க சீன அரசு பல்வேறு முன்னேற்பாடுகளை செய்து வருகிறது. மகப்பேறு விடுப்புக்கான ஊதியம், புதுமண தம்பதிகளுக்கு சம்பளத்துடன் கூடிய 30 நாள் விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இளைஞர்கள் காதலிக்க நேரம் ஒதுக்கும் வகையில் கல்லூரிகள் விடுமுறையை அறிவித்துள்ளன. இருப்பினும், குழந்தை பராமரிப்பு செலவு, கல்வி செலவு, விலைவாசி ஏற்றம் உள்ளிட்ட காரணங்கள் சீனர்கள் குழந்தைப் பெற்றுக் கொள்ள தடையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், திருமணமாகாத பெண்கள், ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பை எடுத்துக்கொண்டு செயற்கை கருவுற்றல் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## சிறுவர்களின் உயிரைப் பறித்த அழைப்பு மணி




அழைப்பு மணியை அடித்து விளையாடிய 3 சிறுவர்களை கொலை செய்த வழக்கில் அமெரிக்க வாழ் இந்தியர் ஒருவர் குற்றவாளி என நிருபணமாகியுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், கலிபோர்னியாவில் வசித்துவந்த அனுராக் சந்திராவின் வீட்டு அழைப்பு மணியை 16 வயது சிறுவர்கள் 3 பேர் அடித்துள்ளனர். கதவை திறந்த அனுராக்கை நோக்கி ஆபாச செய்கைகளை காண்பித்துவிட்டு, நண்பர்களுடன் காரில் தப்பிச் சென்றனர்.

அளவிற்கதிகமாக மது அருந்தியிருந்த அனுராக், தனது காரில், 160 கிலோ மீற்ற வேகத்தில் விரட்டிச் சென்று சிறுவர்கள் சென்ற கார் மீது மோதியுள்ளார். அந்த கார் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில், உள்ளே இருந்த 6 சிறுவர்களில் 3 பேர் உயிரிழந்தனர். மற்ற மூவரும் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவர் குற்றவாளி என தீர்ப்பளித்துள்ளது.

ஸ்பெயினின்

## ரோபோ மூலம் பிறந்த பெண் குழந்தைகள்




ஸ்பெயினில், பிளேஸ்டேஷன் 5 கன்ட்ரோலரைப் பயன்படுத்தி “ஸ்பெர்ம் ரோபோ” மூலம் கருத்தரிக்கப்பட்ட குழந்தைகள் வெற்றிகரமாகப் பிறந்துள்ளன.

விந்தணுவை ஊசி மூலம் செலுத்தும் ரோபோக்களை பார்சிலோனா பொறியாளர்கள் மேம்படுத்தினர்.

அவை அமெரிக்காவின் நியூயார்க் நகர கிளினிக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அந்த ரோபோக்களைப் பயன்படுத்தி விந்தணு செலுத்தப்பட்டு உருவான முதல் 2 பெண் குழந்தைகள் எவ்வித சிக்கலுமின்றி பிறந்தன.

இதன் மூலம் செ யற்கை கருத்தரிப்பு முயற்சிக்கு பயன்படும் இன்-விட்ரோ ஃபெர்டிலைசேஷன் சிகிச்சையை மிகக் குறைந்த கட்டணத்தில் பெண்கள் பயன்படுத்த இயலும்.



ஆபிரிக்கா

## மேலும் 229 பேரைக் காப்பாற்றிய காவேரி

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவ படைகளுக்கு இடையே கடந்த சில நாள்களாக மோதல் நிலவி வருகின்றது.

இந்த உள்நாட்டு போரால் இதுவரை 420 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்போரில் சிக்கி தவிக்கும் இந்தியர்களை‘காவேரி நடவடிக்கை’ என்ற பெயரில் மீட்கும் பணிகளை இந்திய அரசு முன்னெடுத்து வருகின்றது

அந்தவகையில் சூடானிலிருந்து இதுவரை சுமார் ஆயிரத்து 954 இந்தியர்கள் மீட்கப்பட்டு இந்தியா திரும்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சூடான் துறைமுகத்திலிருந்து இந்தியர்களை மீட்டு வரும் பணியில் கப்பற்படையின் ஐஎன்எஸ் தேஜ் கப்பல் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

சென்னை

# சிவப்பு ஆடையில் ஸ்டாலின்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தின நினைவு சின்னத்திற்கு சிவப்பு நிற ஆடை அணிந்து சென்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அதன் பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது”தொழிலாள தோழர்கள் அனைவருக்கும் எனது மே நாள் நல்வாழ்த்துகள். தொழிலாளர்களை வாழ்த்தக் கூடிய அரசாக மட்டுமல்லாமல், அவர்களை வாழ வைக்ககூடிய அரசாகவும் திமுக அரசு செயல்பட்டு வருகிறது. தி.மு.க அரசு கொண்டுவந்த 12 மணி நேர வேலை சட்டத்தை தி.மு.க தொழிற்சங்கமே எதிர்த்ததை பாராட்டுகிறேன். தி.மு.க ஜனநாயக இயக்கம் என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக்காட்டு.

விட்டுக் கொடுப்பதை அவமானமாக நினைக்கவில்லை பெருமையாகவே கருதுகிறேன். 12 மணி நேர வேலை மசோதாவை திரும்பப் பெறுவதாக கூறிய பின்னரும் அவதூறு பரப்புகின்றனர். மசோதா



திரும்பப் பெறப்பட்டது பற்றி எம்.எல்,ஏக்களுக்கு செய்தி குறிப்பு வாயிலாக தெரிவிக்க ப்படும்”இவ்வாறு அவர் கூறினார்.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வீழ்த்திய லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 4-3 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, கேர்ட்டிஸ் ஜோன்ஸ், லூயிஸ் டயஸ், மொஹமட் சாலா, டியகோ ஜோட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாக, ஹறி கேன், சண் ஹெயுங்-மின், றிஷலிஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 76 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 75 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 65 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், 63 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில், ஆர்சனலும், நியூகாசில் யுனைட்டெட்டும் தலா ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.



### பிரெஞ்சு லீக் 1 தொடர்:

## லொரியன்டிடம் தோற்ற பரிஸ் ஸா ஜெர்மைன்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லொரியன்டுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற மொன்ட்பெல்லியருடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் மொனாக்கோ தோற்றது.

லீக் 1 புள்ளிகள் பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் காணப்படுகின்றது. 70 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மர்செய்யும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லென்ஸும், 61 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மொனாக்கோவும் காணப்படுகின்றன. இதில் லென்ஸ் ஒரு போட்டியில் குறைவாக விளையாடியுள்ளது.

> **66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லென்ஸும், 61 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மொனாக்கோவும் காணப்படுகின்றன. இதில் லென்ஸ் ஒரு போட்டியில் குறைவாக விளையாடியுள்ளது**



### இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சலேர்னிடானா போட்டியில் நாப்போலி சமநிலை

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சலெர்னிடானாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி சமப்படுத்தியது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லேஸியோவுடனான போட்டியை 3-1 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது.

இந்நிலையில், பொலொக்னாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 79 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 61 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லேஸியோ காணப்படுவதுடன், 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜுவென்டஸ் காணப்படுவதுடன், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் இன்டர் மிலன் காணப்படுகின்றது. ஏ.சி மிலன், றோமாவும் தலா 57 புள்ளிகளுடன் காணப்படுகின்றபோதும், கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் அவை ஐந்தாம், ஆறாமிடங்களில் காணப்படுகின்றன.

### அஸார்பைஜான் குரான் பிறீ:

## சேர்ஜியோ பெரேஸ் வென்றது



அஸார்பைஜானில் நேற்று முன்தினம் நடைபெற்ற அஸார்பைஜான் குரான் பிறீயில், பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் வென்றார்.

இந்நிலையில், பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த நடப்பு போர்மியுலா வண் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன், இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 93 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பெரேஸின் சக றெட் புல் அணி ஓட்டுநரான வெர்ஸ்டப்பன் காணப்படுகிறார். 87 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மெக்ஸிக்கோவின் பெரேஸ் காணப்படுவதோடு, மூன்றாமிடத்தில் அஸ்தன் மார்டினின் பெர்ணாண்டோ அலோன்ஸோ காணப்படுகிறார்.

ஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 02 மே 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.